# மெட்ரோ ரெயில் 2-ம் திட்ட பணி

## 6 மாதங்களில் தொடங்கும் என அமைச்சர் பேட்டி

சென்னை, ஆக.7-
சென்னை மெட்ரோ நிறுவனம் சார்பில் நந்தனம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இணைப்பு வாகன சேவை திட்டம் மற்றும் மின் ஊர்திகளுக்கான 'சார்ஜர்' வசதிகளை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் தலைமை தாங்கி இந்த திட்டங்களை தொடங்கி வைத்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கடந்த பிப்ரவரி மாதம் 45 கி.மீ. நீளம் கொண்ட மெட்ரோ ரெயில் முதல் திட்ட பணி முடிவுற்று சேவை நடைபெற்று வருகிறது. பயணிகளை மெட்ரோ ரெயில் நிறுவனம் சேவையை அதிகரிக்கும் விதமாக பெங்களூரு தனியார் நிறுவனத்துடன் இணைந்து இந்த இணைப்பு வாகன சேவையை நந்தனம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் தொடங்கியுள்ளது.

மேலும் இங்கு வரும் மின்சார வாகனங்களை 'சார்ஜ்' செய்யும் வசதியையும் அறிமுகப்படுத்தி உள்ளது. சென்னை மெட்ரோ ரெயில் 2-ம் திட்ட பணிக்கான அடிக்கல் நாட்டு விழா இன்னும் 6 மாதங்களில் நடைபெறும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.